Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 601/2025 PW-3**

Name : சுப்ரமணியன்
Father / Husband name : ராமசாமி
Village : தாதாபுரம்
Age : 66
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.06.2026

Accused 1, 2 present. Defence counsel present. APP absent. Witness identified by VM Pettai PS PS HC 1967 Tr.Selvam.

**முதல் விசாரணை**

நான் அரசுப்பேருந்தில் நடத்துனராக வேலைசெய்து ஓய்வில் உள்ளேன். சாட்சி பிரபாகரன் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது அல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது 04.05.2025 அன்று மாலை 06.00 மணிக்கு நீங்களும் உங்கள் ஊரை சேர்ந்த பிரபாரகன் என்பவரும் தாதாபுரம் ரெட்டபிள்ளையார் கோவில் தெருவிலிருக்கும் சந்திரன் என்பவரின் வீட்டின் எதிரில் பேசிக்கொண்டிருந்தபோது வெள்ளிமேடுபேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அங்கு வந்து சண்டை சம்மந்தமாக விசாரித்து இந்த வழக்கில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயாார் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகசரில் நீங்களும் பிரபாகரனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையின் உண்மையை

சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சந்திரன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.